பதிவு அஞ்சல்/ ஒப்புகை அட்டையுடன்

உதவி ஆணையர் (அமலாக்கம்) 0334 22 FEB 2021 கோவை

ஜி3/8775/2020

தொழிலாளர் ஆணையர் அலுவலகம்,
சென்னை–6 நாள்: 18.02.2021.

குறிப்பாணை

பொருள் : பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணிநியமனம் – திருமதி.ப.நாகரத்தினம், இளநிலை உதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், கோவை – அரசுப் பணி வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது – தொடர்பாக.

பார்வை : அரசாணை (3டி) எண்.24, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (இ2) துறை, நாள்: 30.12.2020.

******

பார்வையில் காணும் அரசாணையின்படி கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.ப.நாகரத்தினம் என்பவருக்கு தொழிலாளர் துறையில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் 09.11.2018 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

அன்னாரின் பணி முன் தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின், அவற்றினை நடைமுறையில் விதிகளின்படி, பெறத் தகுதியுடையவராகிறார்.

மேலும், தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டமையால் தனியரை 09.11.2018 முற்பகல் முதல் மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், அக்காலத்தில் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வு மற்றும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்ய வேண்டும் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேல்நடவடிக்கையின் பொருட்டு, பணிப்பதிவேடு, அசல் அரசாணை மற்றும் கீழ்கண்ட அசல் ஆவணங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறும், கீழ்கண்ட அசல் ஆவணங்கள் தனியரிடம் சார்வு செய்யுமாறும் கோவை, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அறிவுறுத்தப்படுகிறார்.

Scanned by CamScanner

1. இறப்பு சான்றிதழ் (சி.ஏ எண். 140/12)
2. வாரிசு சான்றிதழ். (எண். ப.மு.7857/2012/ஆ5, நாள். 25.05.2012)
3. ஒருங்கிணைந்த சான்றிதழ். (ப.மு.18813/2012/ஆ8, நாள். 05.03.2013)
4. 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் (எண். 1753718 மற்றும் 2019917)
5. அரசாணை (3டி) எண்.24, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (இ2) துறை, நாள்: 30.12.2020.

<u>இணைப்பு–</u> மேற்படி

18.2.21

தொழிலாளர் ஆணையருக்காக

18.02.2021

பெறுநர்

தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்), கோவை.

10th மார்க் ஷீட் ஒரிஜினல் பெற்றுக் கொண்டேன்,

23/2/2021

Scanned by CamScanner